ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශේෂමානது

අංක 2213/47 - 2021 පෙබරවාරි මස 05 වැනි සිකුරාදා - 2021.02.05

*2213/47 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பீஎஸ்/சிஎஸ்ஏ/00/1/14/28*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

1. கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ (திருமதி) கேமா குமுதினீ விக்கிரமசிங்க அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி
3. கௌரவ ரத்னபிரிய குருசிங்க அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 02 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால், 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய பணிப்புரையின் மூலம் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக புலனாய்வு செய்யும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொண்டும்,

1A - G 33657 — 395 (2021/02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2021, சனவரி மாதம் 28 ஆந் திகதி தாபிக்கப்பட்ட, 2021, சனவரி மாதம் 29 ஆந் திகதிய 2212/53 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்குரிய பணிப்புரையின் முதலாவது பந்தியை, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன்.*

*"அரசாங்கம் மாற்றமடைந்தவுடன் அரச பதவியிலிருந்து கேட்டு விலகிய அல்லது வேறு ஏதேனும் விதத்தில் அரச பதவி வகித்தல் முடிவடைந்த அல்லது அவ்வாறு அரசாங்கம் மாற்றமடைந்த பின்பும் அப் பதவியைத் தொடர்ந்தும் வகித்த முறையே 2015 சனவரி மாதத்தில் மற்றும் ஓகத்து மாதத்தில் நடத்தப்பட்ட சனாதிபதி தேர்தலுக்கு மற்றும்/அல்லது பொதுத் தேர்தலுக்கு முன்னர் பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், ஆயுதப்படை போன்று பொலிஸ் சேவையின் உறுப்பினர்கள் அல்லது எவரேனும் ஒருவருக்கு அல்லது நபர்களுக்கு 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி ஆரம்பமாகி 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியுடன் முடிவடைந்த கால எல்லைக்குள் நேரடியாக அல்லது மறைமுகமாக நடந்ததாக கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை செய்து தகவல்களை பெற்று புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் வண்ணம் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் 03 தொகுதிகள் மற்றும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகளை திருத்துதல் எனும் பின்னிணைப்புகளோடு எனக்கு சமர்பிக்கப்பட்டதன் பின்னர் சொல்லப்பட்ட இறுதி அறிக்கையின் விடய இலக்கம் 08, 09 மற்றும் 10 இன் கீழ் காட்டப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டும்",*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

*02-429*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.